இருக்கும். எனவே, நமது அரசு சார்பாக வழங்கப்படக்கூடிய அரிசி ஆலைகளில் இந்த Rice Huller rubber roller என்பதை அறிமுகப்படுத்தினால்—பொதுமக்கள் வாங்கிய அரிசியைக்கூட மீண்டும் பட்டை தீட்டி சாப்பிடுகிறார்கள். அந்தப் பழக்கத்தையாவது தவிர்க்கவும், கைக்குத்தல் அரிசி இப்போது எங்குமே கிடைக்கும் சூழ்நிலையில் இருக்கிறது. அதை அரசு மூலமாக நீங்கள்—அறிமுகப்படுத்தினால் நன்றாக இருக்கும். என்னைப் பொறுத்தமட்டில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் நீங்கள் கேள்வி கேட்காமல் விரிவாக சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இன்னும் நிறைய கேள்விகள் இருக்கின்றன. (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், சீக்கிரம் பதில் சொல்லி முடியுங்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு மட்டும் வருடத்திற்கு ரூ.12 இலட்சத்து 50 ஆயிரம் செலவு செய்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல ஆலோசனை சொல்கிறார்கள். அது வரவேற்கக்கூடியது என்று சொன்னாலும், மருத்துவர் என்கிற ரீதியில் சொல்லப்படுகிற அந்த அறிவுரைகள், நடைமுறைச் சிக்கலையும் ஏற்படுத்திவிடும் என்பதால்தான் முழுமையாக இதனைக் கடைப்பிடிப்பதற்கு வாய்ப்பில்லை என்பதனையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

16—

தடுப்பணை திட்டம்

***4882—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 பிப்ரவரி 6]

கோயம்புத்தூர் தெற்கு வட்டம், தொண்டாமுத்தூர் ஒன்றியம், ஆனைமடுவுப் பள்ளத்தின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

என்ற வள்ளுவன் வழியிலே ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் அம்மா அவர்கள் அரசு, ஏற்கெனவே தொண்டாமுத்தூர் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வேலுமணி அவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன், உடனடியாக ஆனைமடுவுப் பள்ளத்தின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்குண்டான பணியை நிறைவேற்ற உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தப் பணிக்காக ரூ.1.1 கோடி மதிப்பில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பணிகள் நடைபெறுவதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களிடம் கோரிக்கை வைத்து, அதனை நடைமுறைப்படுத்துகின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியமைக்கு அவருக்குப் பாராட்டுக்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள தாடியூர் பேரூராட்சிக்கு உட்பட்டிருக்கக்கூடிய பாறைக்கிணறு என்ற இடத்தில் உற்பத்தியாகி ஆனைமடம் என்ற இடத்திற்கு வந்து சேர்ந்து அந்தத் தண்ணீர் பரவலாக செல்கிற காரணத்தினால், அதனை விவசாயத்திற்கு பயன்படுத்த முடியாது. அந்தப் பகுதியை ஒட்டி இருக்கக்கூடிய குக்கிராமங்களுக்கும்

பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கிடைப்பதற்கான வாய்ப்பு வசதிகள் உருவாகும். எனவே, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா; அந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு; அந்தத் திட்டம் எப்போது நிறைவேறும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பணிக்கான மதிப்பீடு ரூ.1 கோடியே 10 இலட்சத்தில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, விரைவில் பணிகள் நடைபெறுவதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பகுதியில் தடுப்பணை கட்டினால் இப்பகுதியில் உள்ள மக்கள் மற்றும் வன விலங்குகளுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதோடு மட்டுமல்லாமல், அங்கேயுள்ள 7 ஊராட்சிகளில், சுமார் 24 கிராமங்கள் பயன்பெறுகின்ற வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டாமுத்தூர், தொண்டாமுத்தூர் சுற்றியுள்ள பகுதிகளில் தற்போது யானைகள் ஊருக்குள்ளே புகுந்து நடமாட்டம் செய்வதால் தொந்தரவு அதிகரித்துள்ளது. இது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. எனவே, இதனைப் பயன்படுத்தி அவற்றிற்கு குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தவும், ஆங்காங்கே தடுப்பணைகள் கட்டுவதற்கும், அதுபோல் இந்த அணையைக் கட்டுவதினால் அந்தப் பகுதி முழுவதும் இருக்கக்கூடிய வறட்சியைப் போக்கக்கூடிய நிலை ஏற்படும். எனவே இதனை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். அதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நிதியாண்டில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2013 பிப்ரவரி 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது குடும்ப தெய்வம், வருங்கால பாரதம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, தொண்டாமுத்தூர் தொகுதி விவசாயிகளுடைய 40 வருட கோரிக்கையை ஏற்று, விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும், 24 கிராம மக்களின் குடிநீர்ப் பிரச்சினையையும், வன விலங்குகளுடைய குடிநீர்ப் பிரச்சினையும் தீர ஆனைமடுவில் தடுப்பணை கட்ட ஆணையிட்ட காவிரித் தாய், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொண்டாமுத்தூர் தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றி மலர்களை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

கால்நடை கிளை நிலையங்கள்

*226—**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மனாபபுரம் தொகுதி, பேச்சிப்பாறை, சுருளக்கோடு ஆகிய பகுதிகளில் கால்நடை கிளை நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேச்சிப்பாறை பகுதியிலும், சுருளக்கோடு பகுதியிலும் கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படுமா என்று வினா